**கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும் கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம் - 2021**

கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும் கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியளிப்பு செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 2020 ஏப்ரல் 02 ஆம் திகதிய உலக வங்கி அறிக்கை இல பிரஷ 3852 இன் பிரிவு 52 மற்றும் 2021 ஏப்ரல் 22 ஆம் திகதிய உலக வங்கி அறிக்கை இல பிரஷ 4442 இன் பிரிவு 71 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. கொவிட்-19 ஆல் திணிக்கப்படும் அச்சுறுத்தலைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் பதிலளித்தல் மற்றும் இலங்கையில் பொது சுகாதாரத் தயார்நிலைக்கான தேசிய முறைமைகளை வலுப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 41,717.45 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 209.11 மில்லியனானதுடன் அத் தொகையில் ரூபா 12,271.25 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 61.51 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் ரூபா 29,446.20 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 147.60 மில்லியன் மிகுதி தொகை நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 ஏப்ரல் 04 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வெளிவளங்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2021 | 253.29 | உடன்பட்டனர். | இத்தவறு அடுத்த வருடத்திற்காக தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவரினால் சாட்டப்பட்ட ரூபா 242.6 மில்லியன் கடன் வட்டி மற்றும் ரூபா 2.7 மில்லியன் ஒப்படைப்பு கட்டணங்கள் என்பன கணக்கிடப்பட்டிராததுடன் 2021 நவம்பர் 15 இல் கடன் வழங்கும் முகவரினால் சாட்டப்பட்ட கடன் உடன்படிக்கை இல 9085 உடன் தொடர்புபட்ட ரூபா 7.99 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 39,695.03 கூட அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | | | சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 161.5 மில்லியன் கொடுப்பனவுகள் பொருட்கள் பெறுவனவு கட்டளைகள், இருப்பு பத்திரங்கள் செய்யப்பட்ட வேலைக்கான அறிக்கைகள், கொடுப்பனவு சான்றுதல்கள் மற்றும் பெறுகை தீர்மானங்கள், 32.3 மில்லியன் கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்ட காசுப்பற்றுச்சீட்டுக்கள் மற்றும் மொத்தமாக ரூபா 36.0 மில்லியனிற்காக 21 கொடுப்பனவுகளிற்கான பட்டியல்கள் போன்ற எழுத்துமூலமான ஆவணங்கள் கணக்காய்விற்கு காணப்படாததன் காரணமாக திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாமலிருந்தது. மேலும் செயற்திட்டத்தினால் செய்யப்பட்ட நிர்மானங்கள், புனரமைத்தல்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் என்பனவற்றின் செயலாற்றல் பற்றிய தகவல் 2022 நவம்பர் 04 அளவில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 229.8 | உடன்பட்டனர். | இக்கிரயங்களை உறுதிப்படுத்தும் எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் பிரிவுகள் 20(1) மற்றும் 20(2) | ரூபா 8.3 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி ஓர் முறையான வரி பட்டியல் பெறப்படாமல் 16 சந்தர்ப்பங்களில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் முறையான வரிப்பட்டியலிற்காக செலுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 8 (1) | கோவிட் 19 நோய்ப்பரவலுடன் தொடர்புபட்ட மருத்துவ உருப்படிகள் 2020 மே 20 இல் இருந்து செல்லுபடியாகுமாறு பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்கலிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவ் ஏற்பாடுகளிற்கு முரனாக மொத்தம் ரூபா 96.3 மில்லியன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட கொள்வனவுகளிற்காக 51 வழங்குனர்களிற்கு வீஏடி ஆக செலுத்தப்பட்டிருந்தமை தெரிவு கணககாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | இவ்வரிகள் மீளப்பெறப்படல் வேண்டும். |
| (இ) | நிதிஒழுங்கு விதிகள் 371(5) | ஏடிஹோக் உபகட்டுநிதி வேலை பூர்த்தியானதன் பின்னர் 10 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். இருப்பினும் 33 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 2.5 மில்லியன் தொகையான ஏடிஹோக் உபகட்டுநிதி 2021 திசெம்பர் 31 அளவில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | நிதி ஒழுங்கு விதி பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஈ) | 2019 மார்ச் 5 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல 1/2019 இன் பந்தி 9.3 | செயற்திட்ட வழிகாட்டும் குழு கூட்டம் சுற்றறிக்கையின் பிரகாரம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடாத்தப்படல் வேண்டும். |
| (உ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய சுற்றறிக்கை இல எம்ஓஎப்பீ/ஈஆர்டி/2007/2 | செயற்திட்டத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவிலிருந்து இரண்டு மாதங்களிற்குள் கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்தும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அண்ணளவாக 6 மாதங்கள் தாமதமடைந்த பின்னர் 2022 ஆகஸ்ட் 25 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை கூறப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கள்களை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர்களின் நிதியத்துடனும் செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் 3 நிகழ்வுகளில் கூட்டுமொத்தம் ரூபா 5,550.4 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 29.97 மில்லியன் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 532.94 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.66 மில்லியன் என்பன யுனிசெப் இற்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | நிதி வரையறைக்கான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கான அனுமதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அனுமதி சீஈபி இல 20/0694/201/016 2020.04.01 இல் பெறப்பட்டுள்ளது. | தேவையான அனுமதி இக்கொள்வனவுகளிற்காக பெறப்படல் வேண்டும். |
| (ii) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா 4,357.99 மில்லியன் மொத்த கிரயத்தில் உள்நாட்டு வழங்குனரிடமிருந்து யுனிசெப் இனால் கொள்வனவு செய்யப்பட்ட 90 உருப்படிகளின் 17,756,669 அலகுகளான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ அலகுகள் மருத்துவ வழங்கள்கள் பிரிவிடம் கையளிக்கப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அனைத்து மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வளங்கள்களும் நன்கொடையாக கருதப்பட்டு இருப்பு புத்தகங்களில் எடுக்கப்பட்டிருந்தது. எனவே அவைகள் எவ்வித பெறுமதியும் இல்லாமல் மருத்துவ வழங்கள்கள் தகவல் முகாமைத்துவ முறைமையில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | எம்எஸ்டி மற்றும் பிடி பணிப்பாளர் எவ்வித தாமதங்களும் இன்றி இவ்விடயத்தினை சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளார். | தேவையான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும். |
| (iii) | மேற்கூறிய பந்தி (ii) இல் கூறப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கள்களில் ரூபா 2,565.90 மில்லியன் மொத்த கிரயமான 9,619,971 அலகுகள் மற்றும் பந்தி (iv) இல் கூறப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களில் ஐ.அ.டொலர் 1.55 மில்லியன் மொத்த கிரயமான 397,798 என்பன மருத்துவ வழங்கள்கள் பிரிவினால் நன்கொடைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. எனவே அவைகள் முறையாக மேற்பாரவை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அதன் பெறுபேறாக இம்மருத்துவ உபகரணம் மற்றும் மருத்தவ வழங்கள்கள் நியம கட்டளையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தமுடியாமலிருந்தது. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | இச்செலவினத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ஐ)2021 திசெம்பர் 16 இல் யுனிசெப் இனால்சமர்ப்பிக்கப்பட்ட இறுதி கணக்கறிக்கையின் பிரகாரம் முற்பணமாக செலுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 32.64 மில்லியனில் ஐ.அ.டொலர் 2.04 மில்லியன் மீதமாக காணப்பட்டது. இருப்பினும் ஏனைய பணம் 2022 ஒக்டோபர் 18 வரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | வழங்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவேண்டியதுடன் மீதமான தொகை முறையாக சேகரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிதிகளினை செலவு செய்து உயர்ந்தபட்ச நிதிவரையறையான ஐ.அ.டொலர் 18.35 மில்லியனிற்குள் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்தவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சு மற்றும் செயற்திட்ட சேவைகளிற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் என்பனவற்றுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் யுனொப்ஸ் ஆனது மீளாய்வாண்டின் போது ஓர் முற்பணமாக கூட்டுமொத்தம் ரூபா 18.35 மில்லியனை செலுத்தியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| | (i) நிதி வரையறை தீர்மானிக்கப்பட்ட அடிப்படை தொடர்பான தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆமைச்சரவை அனுமதி சிபி இல.20/0694/201/016 ஆனது 2020.04 .01 இல் பெறப்பட்டிருந்தது. | அறிமுக அனுமதி இக்கொள்வனவுகளிற்காக பெறப்படவேண்டியதுடன் உரிய அனுமதி கணக்காய்வு நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும. |
| | (ii) மீளாய்வாண்டின் போது யுனொப்ஸ் ஆனது ரூபா 777.67 மில்லியன் மொத்த கிரயத்துடனான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களை வழங்கியிருந்தது. இருப்பினும் அவைகளது அலகுக்கிரயம் ஐ.அ.டொலர் களில் காட்டப்பட்டிருக்கவில்லை. எனவே பெறப்பட வேண்டிய உபகரணங்களின் பெறுமதி உடன்பட்ட நிதிவரையறைக்குள் வழங்கப்பட்டதா என சரிபார்ப்பது சாத்தியமற்றதா இருந்தது. | யுனொப்ஸ் ஆனது உள்நாட்டு வழங்களிற்கான ஐ.அ.டொலர் உடன் தொடர்புபட்ட அலகு விலையை சமர்ப்பிக்க உடன்பட்டிருந்தனர். | இத்தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| | (iii) ஏச்ஈ 440 வரையான 12 சிஆர்ஆர்டி உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு யுனொப்ஸ் இனால் வழங்கப்பட்டிருந்தது. அப் 12 இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் அவ் 2 இயந்திரங்களும் மிகஅவசரம் என கூறப்பட்டு ரூபா 3.52 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17,667.84 கிரயத்தில் ஏழு நாட்களிற்குள் பெறுகை செய்யப்பட்டது. மிகுதி 10 இயந்திரங்கள் ஒவ்வொன்றும் ரூபா 2.97 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 14,891.47 கிரயத்தில் 30 நாட்களிற்குள் பெறுகை செய்யப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 1.10 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5,552.74 மிகவும் | யுனிசெப் ஆனது அவசர நிலமை காரணமாக இரண்டு உருப்படிகளை முறிவுசெய்வதனூடாக பிளவு பெறுகை அடிப்படையில் இரண்டு இயந்திரங்களை கொள்வனவு செய்ய தீர்மானித்திருந்தது. தேவையான விளக்கங்கள் | இது விசாரனை செய்யப்பட்டு அதனடிப்படையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவசரமான தேவை என கொள்வனவு செய்யப்பட்ட 02 இயந்திரங்களிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு அவைகள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 30 நாட்களின் பின்னர் உரிய மருத்துவமனைகளிற்கு அவ்விரண்டு பொறிகளும் விநியோகிக்கப்பட்டதன் காரணமாக இரண்டு இயந்திரங்களிற்கும் எவ்வித அவசர தேவைப்பாடும் காணப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் அவ் இரண்டு இயந்திரங்களும் மற்றைய 10 இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்ட அதே விலையில் கொள்வனவு செய்திருக்க முடியும். மேலும் மேற்கூறிய பெறுகையினை மிக அவசரம் என தீர்மானித்த நபர் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்படுவதுடன் பதில் உரிய நேரத்தில் வழங்கப்படும். | |
| (iv) ரூபா 364.65 மில்லியன் மொத்த கிரயத்தில் 2021 மே ஆகஸ்ட் காலப்பகுதியில் யுனொப்ஸ் இனால் வழங்கப்பட்ட யுனிவெல் ஆக்ஸிசன் செறியுட்டிகள் 2,100 இல் 462 யுனிவெல் ஆக்ஸிசன் செறியுட்டிகள் 2022 ஜுன் 29 இல் விநியோகிக்கப்படாமல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்பட்டனர். | இவ்உபகரணத்தின் தேவைப்பாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படல் வேண்டும். |
| (v) உடன்படிக்கையின் பிரகாரம் அமைச்சின் களஞ்சிய சாலைக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களை விநியோகிக்கும் வரையான அனைத்து கிரயங்களும் யுனொப்ஸ் இனால் செய்யப்பட வேண்டியதுடன் இருதரப்பினர்களும் பொருட்களினை இறக்குமதி செய்யும் போது ஏற்படும் சுங்க கட்டணங்கள் உள்ளடங்களாக வரிகளிலிருந்து விலக்கலிக்க உடன்பட்டிருந்தனர். இருப்பினும் செயற்திட்டமானது 2021 ஆம் ஆண்டு காலத்தின் போது வழங்கப்பட்ட மருத்துவ உபகரணங்களிற்காக ரூபா 45.78 மில்லியன் சுங்க கட்டணங்கள் மற்றும் ரூபா 180,178 விமான கட்டனங்கள் போன்றவற்றை செலுத்தியிருந்தது. | அவதானிப்புடன் உடன்பட்டனர். | இது விசாரணை செய்யப்படவேண்டியதுடன் அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின கூட்டுமொத்தம் ரூபா 824.26 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.11 மில்லியன் மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்காக உரிய வழங்குனர்களிற்கு செயற்திட்டத்தின் நிதிகளிலிருந்து நேரடியாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) இந்நேரடிக்கொடுப்பனவுகள்இ அனுமதிகள் பெறுகை முறைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அதேபோல் காசுப்பெறுவனவுகளிற்கான பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றிற்கான உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்பட்டனர். | அறிமுக அனுமதி இக்கொள்வனவுகளிற்காக பெறப்படவேண்டியதுடன் உரிய அனுமதி கணக்காய்வு நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) 02 சந்தர்ப்பங்களில் ரூபா 192.05 மில்லியன் கிரயத்துடன் இரண்டு தனியார் கம்பனிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களிற்காக வழங்கப்பட்ட 5 பொருள் பெறுகை பத்திரங்கள் ஐக்கிய நாடுகளின் சிறுவர்கள் நிதியத்தினை வழங்குனர் செயலாக வழங்கப்பட்டிருந்தது. இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்பட்டனர். | இது விசாரணை செய்யப்படவேண்டியது டன் அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) 3 சந்தர்ப்பங்களில் 3 தனியார் கம்பனிகளிடமிருந்து ரூபா 243.08 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் உடன்பட்ட திகதியில் வழங்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் தாமத கட்டணங்கள் கட்டளை அல்லது பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்கூறிய படி |
| (iv) 2021 ஒக்டோபர் 04 ஆம் திகதிய ரூபா 53.89 மில்லியன் தொகையான கொடுப்பனவு பற்றுச்சீட்டு இல 1271(iii) உடன் தொடர்புபட்ட பொருள் பெறுகை பத்திரம் மற்றும் விற்பனை பட்டியல் மற்றும் 2021 ஒக்டோபர் 04 ஆம் திகதிய ரூபா 53.4 மில்லியன் தொகையான கொடுப்பனவு பற்றுச்சீட்டு இல 1271 (vi) உடன் தொடர்புபட்ட பொருட் பெறுகை பத்திரம் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். தேவையான ஆவணங்கள் முடியுமான அளவு விரைவில் சமர்ப்பிக்கப்படும். | மேற்கூறியபடி |
| (v) 2021 ஒக்டோபர் 04 ஆம் திகதிய ரூபா 206.25 மில்லியன் தொகையான கொடுப்பனவு பட்டியல் இல 1271(viii) உடன் தொடர்புபட்ட விற்பனை பற்றுச்சீட்டின் உண்மைப்பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். தேவையான ஆவணங்கள் முடியுமான அளவு விரைவில் சமர்ப்பிக்கப்படும். | மேற்கூறியபடி |
| (ஈ) மீளாய்வாண்டின் போது 29 நிகழ்வுகளில் செயற்திட்டமானது மருத்துவ உபகரணங்களின் கொள்வனவிற்காக ரூபா 276.74 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் இம் மருத்துவ வழங்கல்கள் நன்கொடையாக பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இப்பொருட்கள் முறையான பரிசீலனை இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை கூட அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | மேற்கூறியபடி |
| (உ) தாமதகட்டணங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 68.56 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களுடன் தொடர்புபட்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஏல நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இது உரிய நேரத்தில் வழங்குவதினை தாமதித்திருந்தது. | இவ்விடயம் விசாரணை செய்யப்பட்டு பின்னர் அறிக்கை செய்யப்படும். | இது விசாரணை செய்யப்படவேண்டியது டன் அதனடிப்படையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) 2021 மார்ச் 29 இல் அறவிடப்பட்ட தாமத கட்டணங்கள் ரூபா 195,254 ஆக இருந்தும் கூட்டுமொத்தம் ரூபா 402,065 2021 நவம்பர் 10 மீளப்பெறப்பட்டிருந்தது. அதன்படி மேலதிக கொடுப்பனவு தொகை ரூபா 206,811 ஆக இருந்ததுடன் தாமத கட்டணங்கள் | இவ்விடயம் விசாரணை செய்யப்பட்டு பின்னர் அறிக்கை செய்யப்படும். | மேற்கூறியபடி |

| | | | |
|---|---|---|---|
| | மீளப்பெறப்பட்டதற்கான காரணம் மற்றும் அதற்காக பெறப்பட்ட அனுமதி என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | கடந்த வருடத்தின் போது சுகாதார பயிற்சி அதிகாரிகளின் இரண்டு அலுவலகங்களிற்கு வழங்குவதற்கென ரூபா 18.13 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரண்டு வாடகை வண்டிகள் 2022 ஜூலை 28 அளவில் அவ்அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். சுகாதார அமைச்சு உரிய அலுவலகங்களிற்கு இரண்டுவாடகை வண்டிகளையும் வழங்க அறிவுறுத்தியுள்ளது. | இவ் இரண்டு வாகணங்களும் நியமிக்கப்பட்ட அலுவலகங்களிற்கு விரைவாக வழங்கப்படல் வேண்டும். |
| (ஏ) | கடந்த வருடம் ரூபா 239.48 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 805 மோட்டார் வாகனங்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் அவ்உத்தியோகத்தர்களுடன் செய்யப்பட்ட எழுத்துமூலமான உடன்படிக்கை மற்றும் முன்னர் அவ்உத்தியோகத்தர்களிற்கு அவ்மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டதா இல்லையா என்பதனை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் என்பன 2022 செப்தம்பர் 23 அளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். | உடன்படிக்கைகள் இருதரப்பினர்களிற்கிடையேயும் அடையப்படல் வேண்டும். |